# CS(M) EXAM2012

**Serial N**

**G–DTN–M–UBNB**

# TAMIL

## Paper – II

## (Literature)

*Time Allowed : Three Hours*

*Maximum Marks : 300*

---

## INSTRUCTIONS

*Candidates should attempt questions **1** and **5** which are compulsory, and any **THREE** of the remaining questions, selecting at least **ONE** question from each Section.*

*All questions carry equal marks.*

*Answers must be written in **Tamil**.*

**Important : Whenever a Question is being attempted, all its parts/sub-parts must be attempted contiguously. This means that before moving on to the next Question to be attempted, candidates must finish attempting all parts/sub-parts of the previous Question attempted. This is to be strictly followed.**

*Pages left blank in the answer-book are to be clearly struck out in ink. Any answers that follow pages left blank may not be given credit.*

## SECTION–A

1. பின் வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **150** சொற்களுக்கு மிகாமல் விடை தருக :-

(12×5=60)

(a) இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடு ஏற்பட்டு நின்ற தலைவன், தலைவியின் நாணத்தை நீக்குதற்பொருட்டுப் புனைந் துரைத்தல் என்பதை விளக்குக.

(b) "தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கு என முயலுநர் உண்மையானே" - இப்பாடல் உணர்த்தும் பண்பாட்டுப் பேருண்மையைக் குறிப்பிடுக.

(c) "அறிவு அற்றம் காக்கும் கருவி"யாகச் செயல்படும் முறைமையினை வள்ளுவம் எங்ஙனம் புலப்படுத்துகின்றது ?

(d) சிலம்பில், வழக்கும், தீர்ப்பும் அமைந்துள்ள பாங்கினைத் தெளிவுபடுத்துக.

(e) "ஏசினும், யான் உன்னை ஏத்தினும், என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதிகண்டாய்" - என்ற மணிவாசகப் பெருமானின் மணிமொழியின் மாண்பினை உரைக்க.

2. பின் வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **250** சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(20×3=60)

(a) மனவலிமையும், உலக அனுபவமும் நிறைந்த பேராற்றல் படைத்தவளாக - தலைவியின் வாழ்வுக்கு வழி காட்டும் ஒளி விளக்காகத் திகழும் தோழியின் தனித்தன்மைகளைக் குறுந்தொகைப் பாடல் வழி சுருக்கிக் கூறுக.

(b) புறநானூற்றுப் பாடாண் திணைப் பாடல்களின் சிறப்பியல் புகளை எடுத்துக் கூறுக.

(c) "ஆள்வினை உடைமை" என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் உணர்த்தும் செய்திகளைச் சுருக்கி வரைக.

3. பின் வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **250** சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(20×3=60)

(a) நன்றியுணர்வு ததும்பும் பாத்திரமாகக் கும்பகருணன் படைக்கப்பட்டுள்ள பான்மையினைப் புலப்படுத்துக.

(b) பாவை நோன்பை மேற்கொள்வதன் மூலம் ஆய்ச்சியர் கண்ணபிரானிடம் பெற்ற இன்பத்தை ஆண்டாள் கூறியுள்ள திறத்தை வரைக

(c) அவலத்தலைவனின் புகழ்பாடுவது (Praising the tragic hero) காப்பிய உத்திகளுள் ஒன்று என்பதைச் சிலம்பு அடைக்கலக்காதை வழி நிறுவுக.

4. பின் வரும் பாடல்களில் வரும் இடத்தைச் சுட்டி, அவற்றுள் பொருந்தியிருக்கும் பொருள் நலங்களையும், **250** சொற்களுக்கு மிகாமல் விளக்கி வரைக : (20×3=60)

(a) "மக்கட்கு இறையென்று வைக்கப்படும்".

(b) "இன்னாது அம்ம இவ்வுலகம்".

(c) "கீழ்த் திசை வாயில் கணவனொடு புகுந்தேன், மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு".

## SECTION–B

5. பின் வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **150** சொற்களுக்கு மிகாமல் விடை தருக : (12×5=60)

(a) மகாகவி பாரதி கண்ணனைத் தாயாகப் பார்த்துப் பரவசமடைந்து பாடிய திறத்தைக் கூறுக.

(b) தங்கம் குடும்பத் தலைவி எனும் பண்புக்கு இலக்கணமாகத் திகழ்வதைக் குறிப்பிடுக.

(c) "இருட்டிறுடைய ஆத்மாவாய்,
எரிகரியின் சொப்பனமாய்,
இதழ் கறுத்த புன்னகையாய்
இருக்குமொரு
கறுப்பு மலர்".
- என்னும் உருவககவிதையின் கருத்தோவியத்தைத் தீட்டுக.

(d) "அறம்-பணம்-போர்" பற்றி டாக்டர் மு.வ.வின் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

(e) "கலையின் நிலைமை" பற்றி அறிஞர் அண்ணா ஆற்றிய சொற்பெருக்கின் அடிப்படைக் கருத்தைப் புலப்படுத்துக.

6. பின் வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **250** சொற்களுக்கு மிகாமல் விடை தருக : (20×3=60)

(a) உலகியலை உணர்ந்து பாடவல்லவர் பாரதி என்பதைக் கண்ணன் - என் தோழன் என்ற பாடல் வழி விளக்குக.

(b) மு. வரதராசனின் உரை நடைத்திறத்தினை நும் பாடப்பகுதி வழி சான்றுகளுடன் கூறுக.

(c) புரட்சிக் கவிஞரின் உருவப்படத்தைத் திறந்து வைத்து அறிஞர் அண்ணா ஆற்றிய பேருரையின் பண்பாட்டுச் சிறப்பினைப் புலப்படுத்துக.



(Contd.)

7. பின் வருப வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : (20×3=60)

(a) சித்திரப் பாவையால் புலனாகும் சமூக நிலையினைத் தெளிவுபடுத்துக.

(b) நல்ல சிறுகதைக்குச் சான்றாக் குருபீடம் திகழ்வதைக் கூறுக.

(c) தேசமும், மக்களும் அழுது கொண்டே இருக்கும்போது, சிரித்து மகிழச் சந்தர்ப்பம் தரும் நாடகமாக "யாருக்கும் வெட்க மில்லை" விளங்குவதை நிறுவுக.

8. பின் வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : (20×3=60)

(a) முத்துப்பட்டன் பாத்திரப்படைப்பு மிகத் தெளிவாக அமைந்துள்ள திறத்தைச் சுட்டுக.

(b) "ஜம்புலிங்கம் புகழ்", "மலையருவியில்" குறிப்பிடத்தக்க பகுதியாகத் திகழ்வதை நிறுவுக.

(c) "மலையருவியில்" காணப்படும் தாலாட்டுப் பாடல்களின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்துக.